விலை: சதம் 60

# ஈழநாடு

THE EELANADU

மலர்23 ஆனி 11 ஷஃபான் 22 இதழ் 131

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 25-6-1981

நியூ கேமபிறிட்ஜ்
திருநெல்வேலிச்சந்தி
ஆங்கிலமொழி
O/L August 81, 30" மணித்தியால O/L பாடத்திட்டம் முழுவதும் உள்ளடக்கிய தீவிர பயிற்சி வகுப்பு. ஆசிரியர்: திரு. ச. முத்துலிங்கம் A/L துரித மீட்டல் வகுப்பு. 81 August தாவரவியல். சிவவீரசிங்கம். இரசாயனம்; அன்ரன் மாஸ்ரர் கணக்கியல்; பாலா மாஸ்ரர். Short Hand and Typing, Book-keeping, Radio and Electronics,, and Tele Communications. A/L 83 ஆண்டு கணக்கியல்: பாலா மாஸ்ரர். ஆரம்பம்; 1-7-81. உடன் விண்ணப்பிக்கவும்

## கமிஷன் முன் கொப்பேகடுவ

[கொழும்பு]

முன்னாள் காணி அமைச்சர் திரு. ஹெக்டர் கொப்பேகடுவ முன்னாள் கம்பளை எம். பி. திரு. டி. எம். ஜயரத்ன ஆகிய இருவரும் நேற்று விசேஷ ஜனாதிபதி ஆணைக்குழு முன் னிலையில் ஆஜராகினார்கள்.

திரு. கொப்பேகடுவ, திரு. ஜயரத்ன ஆகியோர் தனித் தனியே விசாரிக்கப்படவேண் டும் என்று அரசுதரப்பில் விடுக் கப்பட்ட கோரிக்கையை நிரா கரித்த ஆணைக்குழு இருவரும் ஒன்றாகவே விசாரணைசெய்யப் படுவர் என தெரிவித்தது.

### யாழ்ப்பாணம் வன்செயல் சம்பவங்கள்

# பொலிஸ் விசாரணை முடிந்தது; குழு நாளை கொழும்பு திரும்பும்

## திடுக்கிடும் தகவல்களினால் நல்லபலன் கிட்டுமாம்

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணத்தில் அண்மையில் நடைபெற்ற வன்செயல் சம்பவங்கள் குறித்து விசாரணை செய்துவந்த உயர் மட்டப் பொலிஸ்குழு நேற் றுடன் தமது விசாரணைகளையும், பாதிக்கப்பட்டவர்களிடமிருந்து முறைப்பாடுகளைப் பதிவுசெய்வதையும் முடித்துக்கொண்டது. நாளை வெள்ளிக்கிழமை இப்பொலிஸ்குழு கொழும்பு செல் கிறது. இக்குழுவினர் தமது விசாரணை அறிக்கைகளை எதிர் வரும் திங்கட்கிழமை பாதுகாப்பு அமைச்சிடம் கையளிப்பர் என எதிர்பார்க்கப்படுகிறது.**

யாழ்ப்பாணத்தில் கடந்த மாதம் 31-ம் திகதிக்குப் பின் னர் சில தினங்கள் தொடர்ச் சியாக நடைபெற்ற வன் செயல்கள்தொடர்பாக யாழ்ப் பாணத்திலும் சுன்னாகத்தி லும் கடந்த 13-ம் திகதிமுதல் விசாரணைசெய்துவந்த உயர் மட்ட பொலிஸ் குழு நேற்றுப் பிற்பகலுடன் விசாரணை களை முடித்துக்கொண்டது.

பொலிஸ் குழுவின் விசா ரணைகளின் மூலம் பல திடுக் கிடும் பயனுள்ள தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் எதிர் பார்த்ததைவிட அநேகர் இக் குழுவிடம் சாட்சியமளித்தனர் என்றும் உயர் அதிகாரி ஒருவர் கூறினார்.

விசாரணைக்குழுமுன் சாட்சி யமளிப்பதற்காக வந்த பலர் நேற்று திருப்பி அனுப்பப்பட் டுள்ளதாகத் தெரிகிறது.

முதலில் பிரதிப் பொலிஸ் மாஅதிபர் திரு. ஆர். சுந்தர லிங்கம் தலைமையில் நடந்த பொலிஸ் குழு விசாரணை கட ந்த திங்கள் முதல் பொலிஸ் அதிபர் திரு. கிங்ஸ்லி விக்கிரம சூரியா தலைமையில் நடை பெற்றது.

நேற்று விசாரணைகளைமுடித் துக்கொண்ட குழு இன்று தமது அலுவலகப்பணியில் ஈடு பட்டபின்னர் கொழும்பு திரும்புகிறது.

யாழ்ப்பாணம் சுன்னாகம் ஆகிய இடங்களில் இதுவரை நடைபெற்றுவந்த விசாரணை களின்போது சுமார் 300 பேர் வரை புகார்செய்துள்ளனர். 350-க்கு அதிகமானோர் விசா ரணை செய்யப்பட்டுள்ளனர்.

சுன்னாகம், காங்கேசன்துறை ஆகிய இடங்களில் பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றி வரும் தமிழ் பொலிசார் பலர் உயர்மட்டப் பொலிஸ் குழு முன் இரகசிய சாட்சியமளித் துள்ளனர் என்றும் தெரிகி றது.

### சிங்களப் பெண் சாட்சியம்

யாழ். நக்கீரர் நடைபெற்ற பயங்கரவாதம் சம்பந்தமாக சிங்களப் பெண்மணி ஒருவரும் சாட்சியமளித்துள்ளார்.

[கொ-இ]

## லண்டனில் 'அமிர்

### இலங்கை திரும்புமுன் இந்திராவை சந்திப்பார்

லண்டன், ஜூன் 24

இலங்கைப் பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவரும், தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகமுமான திரு. அ. அமிர்தலிங்கம் நியூயோர்க்கிலிருந்து நேற்று லண்டன் வந்துசேர்ந்தார்.

திரு. அ. அமிர்தலிங்கம், லண்டன் வாழ் தமிழர்களினா லும், மற்றும் முக்கிய பிர முகர்களிலும் சிறப்பான முறையில் வரவேற்கப்பட் டார். இதனைத் தொடர்ந்து சில முக்கிய கூட்டங்களில் அவர் கலந்துகொண்டார்.

இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி இலங்கைத் தமிழர்கள் குறித்து வெளியிட் டுள்ள கருத்துப்பற்றி ஒரு கட் டத்தில் திரு. அமிர்தலிங்கத் திடம் நிருபர்கள் கேட்ட போது.

"இலங்கைத் தமிழர்கள், குறிப்பாக யாழ்ப்பாணத் தமி ழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி குறித்து இந்தியப் பிர தமர் திருமதி இந்திரா காந்தி குரல் கொடுத்திருப்பது, வர வேற்கக்கூடிய விஷயம் என்று லும் இதனைப் பெரிதுபடுத்து வதில் அர்த்தமில்லை. மனிதாபி மானபிரச்னையில் அவர் மிகுந்த அக்கறை காட்டியிருக்கிறார்" என்று கருத்துவெளியிட்ட திரு. அ. அமிர்தலிங்கம்,

"நான் இலங்கை திரும்பும் வழியில் இந்தியா சென்று பிரதமர் திருமதி இந்திரா காந்தியைச் சந்திப்பேன்" என்று தெரிவித்தார்.

### ஜீப்பில் வந்த இருவர்

## ஒழுங்கையால் வந்தவரை ஏற்றிச் சென்றார்கள்

### கோப்பாய் துப்பாக்கிச்சூட்டு மரண விசாரணையில் மாணவர் சாட்சியம்

[யாழ்ப்பாணம்]

"பரமேஸ்வரன் சம்பவ தினம் இரவு 8மணிக்கு வீதி யால் வந்து கொண்டிருந் தார். சிறிது நேரத்தால் ஒரு ஜீப் வந்தது. அந்த ஜீப்பில் இருந்த இருவர் ஒழுங்கை யில் வந்த ஒருவரைப் பிடித்து ஜப்பில் ஏற்றினர் ஞர்கள். அது பரமேஸ்வர னாகவும் இருக்கலாம்"

கோப்பாயில் துப்பாக் பாக்கிச் சூட்டுக்குப்பலி யான விவசாய உத்தியோத் தர் பரமேஸவரனின் மரண விசாரணையில், கோப்பாய் வடக்கைச் சேர்ந்த மாணவன் கந்தசாமி மனோகரன் சாட்சி யமளிக்கையில் மேற்கண்ட வாறு கூறினர்.

யாழ். நீதிமன்றத்தில் யாழ்.

[6-ம் பக்கம் பார்க்க]

அரிய சந்தர்ப்பம்!
ரூபா 1000/- லாபமடையுங்கள்
உங்கள் பயணத்திற்கு இதமான சொகுசு தரும் ஸ்கூட்டர்களுக்கு
வெஸ்பா
விசேட கழிவு வழங்கப்படுகிறது
விசேட விலை: ரூபா 16500/. மட்டுமே
ரூபா 1000/-
விரையுங்கள்.....
சி. சின்னத்துரை அன் கொம்பனி,
25, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7357

யாழ். மாவட்ட
ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
வியாபாரிகளுக்கு
ஓர் நற்செய்தி
உங்களுக்குத் தேவையான சகலவிதமான
இரும்புக்கம்பிகள், அளவு
[10MM] 3/8" [12 MM] 1/2"-[16 MM] 5/8"
பெருமளவில் இறக்குமதி செய்துள்ளோம்.
மற்றும் பல இறக்குமதிப்பொருட்களுக்கு
நாமே பிரதம ஏஜென்சிகளாகவுள்ளோம்.
சகல பொருட்களும் கொழும்பு
விலைகளுக்கமைய, வியாபாரிகளுக்கு
விற்பனைசெய்யப்படும்.
நேரடி இறக்குமதியாளர்
கதிர் ஹாட்வெயர்ஸ்
11/1-2, மொம்ஸாக் பில்டிங்,
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 7130

# வரி விளம்பரம்

## சேவை

எமது மிக்கிக் தினமும் காலை முதல் மாலைவரை நெல் குத்தியும், மா, மிளகாய் அரைத்தும் கொடுக்கப்படும் இறவுண் கிறவுண்டிக் மிக்க எமோக்ன் ரோட், ஹிளிநொச்சி. 0109

## விற்பனைக்கு

10 ஸ்ரீ 8099 YB 100 யமஹா (1979 மாடல்) மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. விபரம்:- ஞ-விற்பனை முகாமையாளர், தமிழ்க்கிம் லிமிட். 249/C மிக்சாரநியவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி:- 7680. (0117)

10 தொன் பாரம் ஏற்றக்கூடிய றெயிலர் விற்பனைக்கு உண்டு. மிக்கவைற் யாழ்ப்பாணம் (0118)

கொக்காவில் கே கே எல். வீதியிலுள்ள பரணி பலசரக்குக் கடை முழு தளபாடங்களுடன் உடனடியாக விற்பனைக்குண்டு தொடர்பு எஸ். உலச்சந்திரன். சி. சி. ரி எம். ஸ்கூல் கொக்குவில் மேற்கு. 0099

## பயிற்சி

பிரபல கல்வி நிறுவனத்தில் றீவைண்டிங் [Rewinding] மூன்றுமாத டிப்ளோமா பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பமாகின்றது. ஆர்வமுள்ளவர்கள் 30-6-81 முன்பாக விபரங்களுக்கு ஈழநாடவும். விளம்பர இல: 0101 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 0101

## விற்பனைக்கு

குமரசோட்டம் கொண்டாவிலில் 3½ பரப்பு காணியும் சிறிய வீடும் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க. P இராசரத்தினம், நெட்டிலிப்பாய், கொண்டாவில். 0114

திருநெல்வேலி சந்திக்கும் விவசாய பாடசாலைக்குமிடையில் கிழக்குப் பக்கமாகவுள்ள 1½ பரப்பு காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும் விளம்பர இல: 0106. C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 0106

## தேவை

சோடாப்பெட்டி ஏற்றி இறக்கக்கூடிய கூலிபாட்கள் தேவை. நேரில் வரவும் பிள்ளையார் ஸ்ரோர்ஸ், 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 0107

## பேச்சுப் போட்டியில் பரிசு பெற்றனர்

(யாழ்ப்பாணம்)

இலங்கை வாக்குரிமை பெற்றதன் 50வது வருட பூர்த்தி விழாவையொட்டி சாவகச்சேரி கல்விவட்டார பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற பேச்சுப்போட்டியில் கைடி குருசாமி கனிஷ்ட வித்தியாலய மாணவர்கள் கனிஷ்ட பிரிவில் முதலிரு இடங்களையும் பெற்றனர்.

செல்விகள் கு. சிவசக்தி, தி. தயச்செல்வி ஆகியோரே முதலிரு இடங்களையும் பெற்றனர். சிரேஷ்ட பிரிவில் இவ்வித்யாலயத்தைச் சேர்ந்த செல்வி ஒ. சாரதா இரண்டாமிடத்தைப் பெற்றார். (கு)

## விற்பனைக்கு

யப்பானிலிருந்து எம்மால் தருவிக்கப்பட்ட ஸ்சிக E L F 310 கூட்ஸ் வான் விற்பனைக்கு உண்டு. நேரில் தொடர்பு கொள்ளவும்

பிள்ளையார் ஸ்ரோர்ஸ்,
31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (0108)

## யாழ் மறை மாவட்டக் கத்தோலிக்க ஆசிரியர் சங்கம்

20-06-81இல் நடைபெற்ற அதிட்டலாபச் சீட்டிழுப்பில் பரிசு பெற்றோர் விபரம்:

1-ம் பரிசு 7067 எம். பாலசுந்தரம்
மானிப்பாய் மகமே நிலையம் ஆங்கிலப் பாடசாலை

2-ம் பரிசு: 5306 ரீ. அமலதாஸ்
14, செக்கிலிஸ் ரோ, பாசையூர், யாழ்ப்பாணம்

3 ம் பரிசு: 17493 சி ஜெயலலிதா
யூனியன்குளம், கோணாவில், கிளிநொச்சி

| பரிசு இல. | பரிசு | பரிசு இல. | பரிசு | பரிசு இல. | பரிசு |
|---|---|---|---|---|---|
| 1. | 2432 | 8. | 2963 | 14 | 3015 |
| 2 | 127 0 | 9 | 18171 | 15. | 3 53 |
| 3 | 27356 | 10 | 9 08 | 16 | 2668 8 |
| 4 | 15 55 | 11 | 2 81 | 17 | 14316 |
| 5 | 4553 | 12 | 874 | 18 | 21676 |
| 6 | 6733 | 13 | 8122 | 19 | 6166 |
| 7. | 8544 | | | | |

| பரிசு இல. | பரிசு |
|---|---|
| 20. | 1530 |
| 21 | 1598 |
| 22 | 1796 |
| 23 | 22424 |
| 4 | 198 |
| 25 | 15499 |

பரிசுச் சீட்டு 18-07-81 இல் யாழ் மனித பத்திரிகையில் நடைபெறும். தமிழ்த்தாத தவறப்படும் பரிசிற்குரியவர்கள் குறிப்பிட்ட இலக்க அடிக்கட்டைகளை சமர்ப்பித்து மேற்படி விழாவில் பரிசில்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

அருட்திரு ஜே நிக்கிலஸ் — பரிபாலகர்
ஆர் போசெப் — தலைவர்
சி வின்சென்ற் — பொதுச்செயலாளர்

(0111)

## இன்றைய பலன்

ஆனிமாதம் 11ம் திகதி
வியாழக்கிழமை
(25 - 6 - 81)

மேடம்: கருப்பொருளை உங்களை வட்டமிடும் எதிர்பாராத முறையில் பொருள் செலவுக்கு இடமுண்டு.

## 2-வது ஆண்டு நினைவஞ்சலி

செல்வி சிங்கராசா
சரோஜினிதேவி
தோற்றம்: 1-11-46
மறைவு 25-6-79

எம்மை ஆறாத்துயரத்தில் ஆழ்த்திவிட்டு மளாத துயரை கொண்ட தெய்வமே, உங்கள் நினைவை எங்கள் உயிர் உள்ளும்வரை இதயத்தை விட்டு பிரிக்கமுடியாது உங்கள் பிரிவால் நினமும் துயரமும் வேதனையும் கொண்டு கண்ணீர் வடிக்கும் பெற்றோர், சகோதரி-சகோதரர்-உற்றார், உறவினர் ஏழாலை மத்தி, ஏழாலை. 0113

## அறிவித்தல்

### யாழ். மாநகர மின் நுகர்வோருக்கு ஒரு வேண்டுகோள்

கன்னாதிலிருந்து யாழ் மாநகரத்திற்கு வரும் நிலக்கீழ் மின் வடங்கள் அதிகூடுதலான சுமையைத் தாங்கமுடியாத வகையில் எதிர்பாராத மின்நுகர்வு அதிகரித்துள்ளதாக மின்சாரசபை மின்சாரசபையின் பொறியியலாளர் எனது கவனத்துக்கு கொண்டுவந்துள்ளார். ஆதலால் மின்நுகர்வோர் மாலை 6-00 மணிமுதல் இரவு 9-00 மணி வரையுமதமது நுகர்வைக் கூடியவரை குறைத்துக் கொள்ளுமாறு பணிவாக வேண்டப்படுகின்றனர்

மேலும் வலுவுக்காக மின்னை உபயோகித்து ஒட்டுவேலை செய்வோரும், பொரிக்கும் இயக்கம் தொழிலகியர்களும் கண்டிப்பாக மாலை 6-00 மணி முதல் இரவு 9 00 மணிவரை தமது இயந்திரங்களை இயக்கவேண்டாமெனவும் வேண்டப்படுகின்றனர்.

விளம்பரங்களும் விளம்பரம் செய்வோரும் தமது விளம்பரப் பலகைகளுக்கான வெளிச்சங்களையும், அலங்கார ஒளிவிளக்குகளையும் விளம்பரத்தின் புறங்கொள்ளி அட்டைக்கு கீழேயும் மாலை 6-00 மணி முதல் இரவு 9-00 மணிவரையும் அணைத்துவிடுமாறு தயவாக வேண்டப்படுகின்றனர்.

மிக்கசக்தி நுகர்வினைக் குறைப்பதில் சகல மின்பாவனையாளரதும் ஒத்துழைப்பு பெரிதும் வேண்டப்படுகிறது.

க. சிவஞானம்,
ஆணையாளர்,
யாழ். மாநகராட்சி மன்றம்
மாநகராட்சிமன்ற பணிமனை,
யாழ்ப்பாணம்.
22-06-1981. 0115

## இன்றைய பலன்

தொழில் துறையில் சிறிது மனக்கசப்பு தென்படலாம் அதிக சிந்தனைக்கிடமுண்டு.

இடபம்: இன்னலின் பின்னலாம் இதயம் வேதனைப்படும் வீட்டில் வைத்தியச் செலவுக்கு அதிகரிக்கலாம் நண்பர்களுக்கு மத்தியில் அபிப்பிராய பேதம் தோன்றக்கூடும் உணர்ச்சி வசப்படாதிருக்கவும்.

மிதுனம்: கடந்துபோன சம்பவ கோர்வு குறித்து கவலைக்கு அதிமாகும் பலவழிகளிலும் பணம் செலவாவதற்கு இடமுண்டு. சிறிய தவறுக்குக் கூடப் பெரிய தண்டனை கிடைக்கலாம் எனத்திடம் வேண்டும்

கடகம்: தற்பெருமை மூலம் நடுமாற்றம் ஏற்படும் கண்துடைப்பு வேலை நடக்கும் கவனம் செலுத்தவும் பெரியோரைப் பகைத்துக் கொள்ளாமல் பொறுமையைப் பேணி நடக்கவும்

சிங்கம்: பேச்சு வன்மையால் பிறரையை நன்மதிப்பைப் பெறுவீர்கள் கல்வித்துறையில் திருப்திகரமான முன்னேற்றமுண்டு சிலருக்கு அதிஸ்ட பலமுமு கிடைக்கலாம் சிறப்பான தினம்

கன்னி: புதிய வழியால் பணம் வந்துசேரும் வெளியூர் புதினமும் உண்டு. குடும்பத்தில் சுமுகமான நிலைதென்படும் புதிய தொடர்புகள் ஏற்படும் அதன் வழி முன்னேற்றமும் மகிழ்ச்சியும் தென்படும்.

துலாம்: தூரதேசவாசம் துயரத்தில் ஆழத்தும் எதிர்பாராத விபரீதிற்கும் இடம் ஏற்படலாம் ஆயுதங்களுடன் பழகுபவர்களுக்கு அவதானம் வேண்டும்

விருச்சிகம்: இல்லறத்தில் இனிமை தவழும் வெளியிடத்துத் தவறான பெருகும் நினைவுகளினால் உதவியுடன் செல்வாக்குகள் உயரும்

தனு: வேண்டிய ஒருவரைப் பகைத்துக் கொள்ள நேரிடலாம். அரசாங்க போக்கினால் ஆத்திரங்கள் கிளையும் சிலர் வாழ்க்கையில் பிரிவுத்துயர் வாட்டக்கூடும் சகோதரவழியாலும் சஞ்சலமுண்டு

மகரம்: இன்று சுவைதரும் நிகழ்ச்சிகள் இடம் பெறும் வெளியிடத்திலிருந்து விடுப்பூட்டும் செய்தி ஒன்று கிடைக்கலாம் இல்லறத்தில் இனிமை தவழும் இன்று சுபயோக நாள்

கும்பம்: பூமிவிருத்தியுடன் புதியதொரு பொருளும் பெருகும் அரசாங்க ஊழியர்களின் உத்தியோக உயர்வுக்கும் இடமுண்டு சிலர் வாழ்க்கையில் வெளிநாட்டுப் பயணமொன்றும் மேற்கொள்ளப்படலாம்

மீனம்: உழைப்பினால் முன்னேற்றம் ஏற்படும் வியாபாரத்துறையில் விருத்தியுண்டு தாய்வழிப் பொருள் வரவுக்கும் இடமுண்டு

சோதிடவாணி
க. வேலுப்பிள்ளை

## யாழ். எம். பி. 'யோகேஸ்' கிடுகளை ஊழங்கினார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண வன்செயல் சம்பவங்களின் போது எண்ணெயில் தீக்கிரையாக்கப்பட்ட வீடுகளை கட்டுவதற்கரிய கிடுகுகளை யாழ் எம் பி திரு. வெ யோகேஸ்வரன் பரிசளிக்கப்பட்ட ஏழைக் குடிசைவாசி சிலருக்கு நேற்று முதலிடம் வழங்கினார்.

இக்கிடுகு வழங்கலின் போது யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திசபை உறுப்பினர் திரு. என். இராசேந்திரமும் உடனிருந்தார்

யாழ் எம் பி திரு. வெ. யோகேஸ்வரனின் ஏற்பாட்டின் மீது இந்தக்குடிசைகளை வேய்வதற்கும் பணியிலிருந்து திரு. வண்ணை ஆனந்தன் தலைமையிலான குழுவினர் கிடுகுகளை சேகரித்துக்கொண்டு வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. [து]

## லட்சார்ச்சனை

(யாழ்ப்பாணம்)

யாழ் திருவண்ணைநகர் அருள்மிகு செந்தில் கதிர்வேலாயுத சுவாமி திருக்கோயில் லட்சார்ச்சனை இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

இன்று காலை சங்காபிஷேகம், லட்சார்ச்சனை நிறைவு, அன்னதானப்பணி, மாலை மணவாளக்கோலம், ருக்மணியாண்டி சுவாமி திருவுலாவருதல் ஆகியன இடம்பெறவுள்ளது.

## கூட்டணி அலுவலகம் எரிப்பு விசாரணை

[யாழ்ப்பாணம்]

யாழ் நகரில் தீக்கிரையாக்கப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி தலைமைக்காரியாலயத்திற்கு ஏற்பட்ட சேதம் குறித்து ஊர்காவற்றுறை எம் பியும் தமிழர் விடுதலைக் கூட்டணி அமைப்புச் செயலாளருமான பண்டிதர் கா பொ இரத்தினத்திடம் யாழ் வன்செயல் குறித்து விசாரணை செய்து வரும் பொலீஸ் உயர்மட்டக்குழுவைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் ஜனாதிபதி என் மீடிக் நேற்றுவாக்கு மூலம் பதிவுசெய்தார். (இ)

## ஒபெக் நிதியுதவி

[கொழும்பு]

வளர்முக நாடுகளின் விஞ்ஞான, தொழில்நுட்ப வளர்ச்சிக்கு 'ஒபெக்' நாடுகளின் நிதி உதவி பெறப்படும் வளர்முக நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு கூடுதலான ஒத்துழைப்பைவழங்க இந்நாடுகள் சம்மதம்தெரிவித்துள்ளன "

கேர்னிவெலாற வெளிநாட்டமைச்சர் ஜனாப் ஏ சி எஸ் ஹமீட் 'ஒபெக்' நாடுகளுக்கான தனது விஜயத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பியபோது தெரிவித்தார்:

## இல்லப் போட்டி

(அரியாலை)

சோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் வருடாந்த இல்லங்களுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் சனிக்கிழமை கல்லூரி அதிபர் திரு. சி செல்வரத்தினம் தலைமையில் நடைபெறவிருக்கிறது

பிரதம அதிதியாக கலந்து கொள்ளும் சோப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு. சே. இராஜரட்ணம் மனைவி-மணவி-களின் அணிநடை பரியாதையை ஏற்றுக்கொண்டு போட்டியில் வெற்றிபெற்றோருக்கான விருதுகளையும் வழங்குவார். [கு]

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட அபிவிருத்திசபைகளின் கீழ் இயங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் செயலாளர்கள், செயலாற்றுவதற்கான அறிவுறுத்தலாக சம்பந்தமான கருத்தரங்கொன்று இம்மாத இறுதியில் நாடாத்தப்படவிருக்கின்றது

யாழ்ப்பாணம் ஆரசாங்க செயலகத்தில் நடைபெறவிருக்கும் இக்கருத்தரங்கில் வடமாகாண உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. அ. ரகுபிரட் அறிவுறுத்துவரைவழங்கவுள்ளார்

(ஏ வி எம்.)

மணிவாக்கு

நிலத்தை அடைமானம் வைத்தால் திருப்பிக்கொள்ள லாம். நாணயத்தை இழந்துவிட்டால் ஒரு நாளும் திரும்பப் பெற இயலாது — பில்டன்

# நமது நோக்கு

## கிராம எழுச்சித் திட்டம்

"நாடாக இருந்தாலும், காடாக இருந்தாலும், மேடாக இருந்தாலும், பள்ளமாயிருந்தாலும், எங்கு நல்ல ஆடவர் இருக்கிறார்களோ அங்கு தான் நிலமே நல்ல தன்மையுடன் விளங்குகிறது!"

ஔவையாரின் அழகான வாக்கு இது! இன்று நமது வீழ்ச்சியாக பாதிக்கப்பட்ட யாழ்ப்பாண மக்களுக்கும், நாட்டின் தமிழ் மக்களுக்கும் மட்டுமல்ல, நாட்டின் அனைவருக்கும் இன்றைய அவல நிலையில் சிந்தனையைத் தூண்டவல்ல அமுத வாக்கு இது.

கொழும்பின் கொலுவிருக்கும் மத்திய அரசு, கிராமப் புறங்களில் நாளாந்தம் நடக்க நாட்டியப் பாங்கில் கிராம எழுச்சிக் கூட்டங்கள் நடத்துவதிலும், ஆயிரக் கணக்கானோர் பங்கு பற்றிக் குதூகலித்தார்கள் என்று பத்திரிகையில் படங்களும், வானொலியில் செய்தியும், செய்தியின் பின்னணியும் நிகழ்த்துவதாலும், நலிவுற்றிருக்கும் நூற்றுக் கணக்கான கிராமங்கள் எழுச்சி பெற்று, ஊனில், உடல், உறைவிடம், கல்வி, சுகாதார வசதிகள் பெற்று விடப்போவதில்லை. மரத்தின் அடிக்கு நீர்பாய்ச்சவ தொழிய கொப்புக்களல்ல வென்பது தெளிவு.

இதற்கு மேலாக உடம்பையும் உயிரையும் வளர்க்கும் மண்ணுலக வசதிகள் மட்டுமல்ல ஆத்மீக உணர்ச்சியை ஊட்டும் சமய மறுமலர்ச்சியையும் மற்றைய தூண்டு இத்திட்டம் அமைகிறதென்று ஜனாதிபதி ஜெயவர்த்தனா நாளுக்கு நாள் வற்புறுத்தி வருகிறார்.

இந்த 'எழுச்சி' கூட்டங்களில் நாட்டில் வாழும் தமிழ் மக்கள் பற்றி மறந்தும் ஏதும் பேசப்படுவதில்லையென்பதும் கொழும்புப் பத்திரிகைகளும், வானொலியும் அப்படிப் பேசப்பட்டிருந்தால் அதை இருட்டடிக்கிறார்களோ என்பதும் தெளிவாகவில்லை.

இக்கலை புராதன தமிழ்ச்சமூகம் காலத்தின் கோலத்தால் அடிமை உணர்வு பீடிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று எவரும் நினைத்தால் அது ஒரு பிரமப்போல் பருந்த பிழை என்பது எமது திடமான நம்பிக்கை.

தமிழ் மக்களின் இன்றைய சஞ்சல நிலை தங்கள் தற்பாதுகாப்பை ஒட்டியது. இதனைப்பற்றி அரசாங்கம் குறிப்பாக ஜனாதிபதி ஜெயவர்த்தனா அவர்களும் பிரதமர் 'பிரேமதாச அவர்களும் கவலை கொண்டிருப்பது நமக்கறிந்த விடயம்.

பிரதமர் பிரேமதாசா யாழ்ப்பாணம் விஜயம் செய்கையில் இங்கு அவர் பெற்ற மாபெரும்வரவேற்பு ஜனாதிபதி ஜெயவர்த்தனா அவர்களை இங்கு வரத் தூண்டுமென நாம் அன்று குறிப்பிட்டிருந்தோம்

அரசியல் வேறுபாடுகளைக் கட்டி அரசியலின் கொந்தளிப்புக்கு ஒருபுறமிருக்க நாட்டின் ஜனாதிபதி இப்பகுதி மக்களை தேர்தல் சந்திக்க இன்னும் வாய்ப்புக் கிட்டவில்லையானால் நாட்டின் ஒரு முக்கிய பகுதி நல்லாட்சிக்கு உட்படவில்லை என்று சொல்வது தவறு

"எழு நகரத்தின், (1) கல்லூரி சாரம், (2) அரசியல் விதாபனம், (3) அன்றாட வாழ்க்கைக்குழைக்கும் சாதாரண விற்பனை நிலையங்கள் இம் மூன்று முக்கிய அம்சங்களைத் திட்டமிட்டு அழித்து விட்டாலைச்செயல்கள் அரசுக்கு ஆதரவு பெருக்கும் செயல்களல்ல, அரசாங்கம் இவற்றை ஆதரித்ததென்ற குற்றச்சாட்டுகளை பகுத்தறிவுள்ளவர்கள் எவரும் நம்பமாட்டார், அதுவும் தேர்தல் காலத்தில்.

எனவே இப்பயங்கர ஆக்கிரமிப்புபற்றி ஒரு பொலிஸ் விசாரணை, அல்லது ஒரு ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை நடத்துவதாயின் டபிள் நியூமோனியாவில் அவஸ்தைப்படும் ஒருவருக்கு டிஸ்பிறின் குளிகை கொடுப்பது போலிருக்கும்!

கிராம எழுச்சித்திட்டம் உருப்படவேண்டுமானால் கொழும்பிலிருந்து உருவாகும் திட்டம் கிராமத்திற்கு ஊர்வலம் நடத்துவது மடமையாகும். கடனின் ஆரம்பமாகும் இத்திட்டமும் கிராமக்களின் கடமுயற்சியிலும் ஆர்வத்திலும் ஒத்துழைப்பிலும் பெரிதும் தங்கியிருக்கின்றது!

நகரங்களை அழித்துவிடுவதால் கிராமங்களை விருத்தியடையச் செய்துவிட முடியாது இத்திட்டம் நாட்டின் இனங்கள் அனைத்துக்கும் பொதுவானது. இன்று நடந்தேறிய அபிவிருத்திநேர்தலில் மக்களால் தெரிந்தெடுக்கப்பட்ட அபிவிருத்திசபைகள் மத்திய அரசின் தலையீட்டினால், பாகுபாட்டாக் பாதிக்கப்படாமல் தொழிற்படுமானால் இந்நாட்டுக்கும் இன்றைய அரசுக்கும் விமோசனம் கிட்ட இடமுண்டு.

இதற்கு அவசரமானதும் அத்தியாவசியமானதும் தமிழ்மக்களின் பாதுகாப்பான அச்சமற்ற வாழ்வு, இதற்கு அரசியல் தீர்வு காண அரசாங்கம் பொறுப்புள்ள முறையில் முன்வர வேண்டும்.

## சஞ்சய் நினைவுமுத்திரை

புதுடில்லி ஜூன் 24

சஞ்சய் காந்தியின் முதலாண்டு நினைவு தினத்தையொட்டி இந்திய மத்திய அரசினால் முத்திரை யொன்று இன்ற வெளியிடப்பட்டது. இம் முத்திரையை சஞ்சய் காந்தியின் மனைவி திருமதி மேனகா காந்தி முதலில் பெற்றுக்கொண்டார். (வெ)

# "சார்ஜன்டு கனகசுந்தரத்தை ஏற்றிச்சென்ற எனதுகாரை இனவழியில் தீயிட்டு எரித்துவிட்டனர்"

## கார் உரிமையாளர் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

"நாக்கிளார் கோவிலடி துப்பாக்கிச் சூட்டில் பலியான பொலிஸ் சார்ஜன் கனகசுந்தரத்தை அறிவேன், எனது காரில் ஏற்றிச் சென்று யாழ். பெரிய ஆஸ்பத்திரியில் அனுமதித்துவிட்டு திரும்பி வரும்போது எனது காரை தீயிட்டு எரித்துவிட்டனர்."

உயர் பொலிஸ் விசாரணைக் குழு முன் சாட்சியமளித்த தம் யாழி கொக்குவிலைச் சேர்ந்த சுட்லபாபா யோகலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

சு. யோகலிங்கம் மேலும் கூறியதாவது: "கடந்த மாதம் 31-ம் திகதி இரவு நாச்சிமார் கோவிலடியில், தமிழர் விடுதலைக் கூட்டணி தேர்தல் பிரசாரக் கூட்டம் நடைபெற்றது. நான் அங்கு நின்று கூட்டத்தைப் பார்த்துக்கொண்டிருந்தேன். அப்போது யாழ். மாநகர முதல்வர் திரு. ஆர். விஸ்வநாதன் பேசிக் கொண்டிருந்தார். அப்போது வெடிச் சத்தம் ஒன்று கேட்டது. திடீரென காயமடைந்த சார்ஜனை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசெல்ல கார் ஒன்று தேவையென ஒலிபெருக்கி மூலம் முதல்வர் திரு விஸ்வநாதன் கூறினார். அங்கு நின்ற மற்ற கார் உரிமையாளர்கள் எல்லாம் தங்கள் கார்களைப் பாதுகாப்பாக எடுத்துச்சென்று விட்டனர்.

"நான் எனது காரை கொண்டு சென்று காயமடைந்த சார்ஜன் கனகசுந்தரத்தை ஏற்றினேன். அவரது மறைவின் எடுத்துக் கொண்டேன். இரத்தம் வடிந்தபடி அவர் காரில் இருந்து 'ஐயோ அம்மா' என்று கதறிக்கொண்டிருந்தார். பின் 'ஐயோ என் மறைவின்' என்றும் கதறினார். மறைவின் என்னிடம் இருப்பதாகக் கூறினேன். பின்னர் நான் அந்த மறைவின் ஆஸ்பத்திரி பொலிஸாரிடம் ஒப்படைத்தேன்.

"சார்ஜன் கனகசுந்தரத்தை ஆஸ்பத்திரியில் அனுமதித்து விட்டு திரும்பி வரும்போது எனது காருக்கு பெற்றோல் இல்லாமல் போய் விட்டது. நான் சாரதியை காரில் விட்டு விட்டு பெற்றோல் வாங்கப் போய் விட்டேன். திரும்பி வந்து பார்த்தபோது கார் கண்ணாடிகள் உடைக்கப்பட்டிருந்தது. நான் பயத்தில் ஆஸ்பத்திரிக்கு திரும்பி ஓடினேன். பொலிஸாரின் உதவியை நாடினேன். அங்கிருந்த பொலிஸ் அதிகாரி, மற்றப் பொலிஸார் வந்தபின் உதவி தருவதாகக் கூறினார்

"நான் காரில் சார்ஜனைக் கொண்டு வரும்போது ஒரு வழிப் பாதையால் வந்தேன் அப்போது பொலிஸார் அங்கு நின்றனர். நான் அவர்களைப் பொருட்படுத்தாமல் வந்துவிட்டேன். திரும்பிச் செல்லும் போது ஒரு துண்டு தரும்படி கேட்டேன் துண்டு ஒன்று தந்திருந்தார்.

"ஆஸ்பத்திரி பொலிஸ் போஸ்டில் நான் இருந்தபோது மற்றொரு பொலிஸ் வந்தார். எனக்கு உதவி செய்யுமாறு அங்கிருந்தவர் கூறியபோது, அவர் மறுத்து என்னிடமிருந்த துண்டையும்பறித்துவிட்டார்.

"பின்னர் நான் கார் நின்ற இடத்திற்கு வந்தேன். அங்கு எனது கார் தீப்பிடித்து எரிவதைக் கண்டேன் அதனால் மீண்டும் ஆஸ்பத்திரிக்கு ஓடிச் சென்று இரவு முழுவதும் ஆஸ்பத்திரியில் தங்கியிருந்தேன்.

[கொ]

# "கல்வித்தரம் குறைவதற்கு அதிகாரிகளே பொறுப்பு"

## யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

"தகுதியுள்ள ஆசிரியர்களை பாடசாலைகளிலிருந்து அடிக்கடி இடமாற்றம் செய்வதால், மாணவர்கள் கல்வி பாதிக்கப்படுவதுடன், இதுபோன்ற கல்லூரிகளின் வளர்ச்சியும் குன்றி வருகிறது. இதற்கு கல்வித் திணைக்களமும், கல்வி அமைச்சுமே பொறுப்பேற்கவேண்டும்"

இவ்வாறு யாழ் மாவட்ட அபிவிருத்திசபைத் தலைவரும், முன்னாள் செனட்டருமான சட்டத்தரணி சு. நடராசா, மல்லாகம் மகாவித்தியாலயத்தின் 3மாடிக்கட்டிடம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகையில் குறிப்பிட்டார்

மேற்படி வித்தியாலய அதிபர் திரு. இ. மகாதேவன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு நடராசா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: "அபிவிருத்திச்சபைத் தலைவர் என்ற முறையில் நான் முதல் முதலாக ஒரு அறிவான வித்துக்கு அடிக்கல் நாட்டும் பொது நிகழ்ச்சியில் கலந்து கொள்வதுகுறித்து பெருமையும் மகிழ்ச்சியுமடைகின்றேன்.

இயற்கையாகவே சிறிது சுயநலம்கொண்ட எமது தமிழர்கள் தங்கள் பிள்ளைகளின் கல்வி முன்னேற்றம் கருதி வளர்ச்சி கருதி சிறந்த கல்லூரிகளுக்கு பிள்ளைகளை அனுப்புவது வியப்பல்ல, இதற்காகவே நாம் பெற்றோர்களை குறை கூறுவதில் எதுவித அர்த்தமுமில்லை. ஆசிரியர்களை அடிக்கடி இடமாற்றம் செய்யும் அதிகாரிகளே பாடசாலை வளர்ச்சியின்மைக்கு பொறுப்பேற்கவேண்டும்" என்றார்

கல்லூரி அதிபர் திரு. அ. மகாதேவன் பேசுகையில் நான் பதவியேற்ற ஒரு வருஷகாலத்தில் இக்கல்லூரியின் அபிவிருத்திக்கு இயன்றவரை அக்கறை காட்டிவருகின்றேன். இதற்கு கல்லூரி அபிவிருத்திச்சங்கமும் உற்சாகமூட்டி வருவது பாராட்டத்தகுந்தது என்றார்

பாடசாலை அபிவிருத்திசபை செயலாளர் திரு. மு. அருணாசலம் நன்றி தெரிவித்துப் பேசினார்.

(மா)

## மக்கள் கருத்து

### யாழ். நூலகம்

யாழ். பொது நூல் நிலையத்தைச் சைக்கிள் பாதுகாப்புக்காக விடப்படும் இடத்தில் தற்காலிகமாக நிறுவ யாழ் மாநகரசபை எடுத்த முடிவை மாற்றியிருப்பது மகிழ்ச்சிதருவதாகும் இந்தத் தற்காலிக நூலகத்துக்காக 84 ஆயிரம் ரூபாய்வரை செலவழிக்கமுன்பு தீர்மானிக்கப்பட்டிருந்தது. இந்த முயற்சி வீண் விரயம் என்று சுட்டிக்காட்டி 'ஈழநாடு' வாசகர் ஒருவர் எழுதியிருந்தது நினைவு குறிப்பிடத்தக்கது

வீண் பணவிரயங்களைத் தவிர்த்து இப்படியான பாராட்டும் செயல்களை யாழ். மாநகரசபை தொடர்ந்து மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

க. ராமசாமி

யாழ்ப்பாணம்

# பொலிஸாக மாறிய ரயில் ஊழியர்கள்!

## 'குட்டு' வெளிப்பட்டதும் தலைதெறிக்க ஓடினர்

(மாவிட்டபுரம்)

புகையிரதப்பகுதி ஊழியர்கள் சிலருக்குத் தாம் பொலிசாராக மாறவேண்டுமென ஆசை பிறந்தது. தாம் பொலிசார் எனக் கூறி, வீதியில் சென்றவர்களைத் தொந்தரவு செய்த அவர்கள் பெரும்மக்கள் தம்மைச் சூழ்ந்துகொள்ளவே தலைதெறிக்க ஓட்டம் பிடித்தனர்.

இச்சம்பவம் காங்கேசன்துறையில் நடந்தது.

கொழும்பிலிருந்து வந்த புகையிரதமொன்றில் கடமையாற்றிவந்த புகையிரத ஊழியர்கள் புகையிரதம் காங்கேசன்துறையை அடைந்ததும் அங்குள்ள விடுதியில் தங்கியிருந்துவிட்டு மறுபுகையிரதத்தில் திரும்பிச் செல்வது வழக்கம்.

இவ்வாறு விடுதியில் தங்கிய சில ஊழியர்கள் பொலிசாராக மாற விரும்பினர் மதுபோதையில் வீதியில் திரிந்து வீதியால் வந்த சைக்கிள்களை நிறுத்திப் பொசமக்களுக்குத் தொந்தரவு கொடுப்பதில் ஈடுபட்டனர். இவர்களைப் பொதுமக்கள் அடையாளங் கண்டு கொண்டு அவர்களைச் சூழ்ந்து கொண்டனர்.

(5ம் பக்கம் பார்க்க)

## பானிசத்தார் நாட்டைவிட்டு வெளியேறவில்லை!

### பிரதம வழக்குத் தொடுநர் தகவல்

தெஹ்ரான் ஜூன் 24

ஈரானின் புரட்சிவாத மத தலைவர் அயத் தொல்லா கொமெய்னியினுக் ஜனாதிபதியிலிருந்து நீக்கப்பட்ட பானிசத்தார் இன்னமும் ஈரானிலேயே இருந்து வருவதாக ஈரானின் பிரதம வழக்கு தொடுநர் தெரிவித்துள்ளார். பானிசத்தார் நாட்டைவிட்டு வெளியேறவில்லையென்றும் அவர் கூறினார்.

1979ம் ஆண்டு ஈரானில் இடம்பெற்ற புரட்சிக்கு பின்னர் 100க்கு அதிகமானோருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்ட நீதிமன்றத்தில் வைத்தே ஈரானின் பிரதம வழக்கு தொடுநர் இந்தவகையாகவெளியிட்டார்.

பானிசத்தார் எங்கிருந்தாலும் அவரை கண்டு பிடித்து ஒப்படைக்கும்படி ஈரானிய அரசாங்கம் அதன் புரட்சிவாத காவல் படையினருக்கு உத்தரவிட்டுள்ளது.

ஈரானிய அரசாங்கத்திற்கு விரோதமாக நடந்த குற்றச்சாட்டின் பேரில் கடந்த வாரம் ஒன்பது பேருக்கு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டதாகவும் ஈரானின் பிரதம வழக்கு தொடுநர் தெரிவித்தார். (வெ)

## தமிழ்நாட்டில்

## ஹரிஜனங்கள் மதம் மாறுவது துர்அதிர்ஷ்டமான சம்பவம்

### – யோகேந்திரா மக்வானா

சென்னை ஜூன் 24.

"தமிழ்நாட்டில் ஹரிஜனங்களுக்கு துன்பம் விளைவிக்கப்பட்டு வருவதாகவும் இது குறித்து பிரதம மந்திரி இந்திரா காந்திக்கு அறிக்கை பொன்றை சமர்ப்பிக்கவுள்ளேன்" என்று மேற்கண்டவாறு உத்துறை ஸ்டேட் அமைச்சர் திரு. யோகேந்திரா மக்வானா சஞ்சய் காந்தியின் முதலாண்டு நினைவு தினத்தை யொட்டி நேற்று தமிழ் நாட்டில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றுகையில் கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

"தமிழ்நாட்டிலுள்ள ஹரிஜனங்கள் இஸ்லாமிய மதத்திற்கு மாறிவருவது துர்அதிர்ஷ்டமான சம்பவம்" என்றார். (வெ)

## யாழ். அசம்பாவித சம்பவம்:

# பின்னணியிலுள்ள சகலரும் தண்டிக்கப்பட வேண்டும்!

### யாழ். சுதந்திரக்கட்சி அமைப்புக்குழு கோரிக்கை

யாழ்ப்பாணம்,

யாழ். குடாநாட்டிலேற்பட்ட அசம்பாவித சம்பவங்கள் யாழ் குடாநாடுஓர் கிறைப்படுத்தப்பட்ட பிரதேசம் என்றும் நாட்டில் இன்றுள்ள பாசிஸ ஆட்சியின் அடக்குமுறையையும் எடுத்துக் காட்டியுள்ளது. இச்சம்பவங்களின் பின்னணியில் நின்று செயற்பட்ட சகலரும் தண்டிக்கப்படவேண்டுமென ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் யாழ் மாவட்ட அமைப்புக்குழு கோரியுள்ளது.

யாழ் மாவட்ட அமைப்புக் குழுகூட்டம் ஆக்கமையில் நடைபெற்றபோதுநிறைவேறிய ஏகமன தீர்மானங்கள் வருமாறு:-

கடந்த 31ம் திகதிக்கு முன் பின்பாக நடந்தேறிய சகல அரசியல் அநாகரீக செயல்களையும் இதில் அப்பாவி மக்களின் உயிருக்கு வேட்டுவைப்பதும் உடைமைகளைத் தாக்குவதும் சூறையாடுவதும், தீவைப்பதும் சட்டத்திற்கும், நீதிக்கும் தர்மத்திற்கும் அப்பாற்பட்ட செயல்களேயாதலினால் எமது குழு இவற்றை வன்மையாக கண்டிக்கிறது.

## நூல்நிலையத் தாக்குதல்

"தெல்லிப்பழைக்கோட்டையிலே சிறந்த நூல் நிலையங்களில் ஒன்றுமதும் சுமார் ஒருலட்சம் நூல்களை கொண்டதுமான யாழ் பொது நூலகத்திற்கு தீவைத்தமை நாட்டின் சகிப்பு வளர்ச்சியில் அரசின் கொள்கையை கோடிட்டுகாட்டுவதாயுள்ளது. மேலும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் திரு. வெ. யோகேஸ்வரனின் வீட்டிற்கும், தமிழர் விடுதலைக் கூட்டணி காரியாலயத்திற்கும், யாழ் பிரதேசத்திலிருந்து வெளியாகும் ஒரே ஒரு நாளேடான 'ஈழநாடு' ஸ்தாபனத்திற்கும், கைவக்கோயில்களுக்கும், யாழ்ப்பாணத்திலும், கண்ணாத்திலும் அமைந்திருந்த பொதுச் சந்தைக்கும் தீவைத்தமையால் ஏற்பட்ட நட்டம் பல கோடி ரூபாவுக்கு மேலாகும் இச்சம்பவங்களுக்கெல்லாம் பின்னணியாக அரசியற்திரமுறி, பாதுகாப்புப் படையும், ஆயுதப்படையும் செயல்பட்டுள்ளன என்பதும் சாதாரண உண்மையாகும். யாழ். குடாநாடு முழுவதும் நூற்றுக்கு மேற்பட்ட கடைகளுக்கு தீவைக்கப்பட்டு அங்குள்ள பொருட்களும் சூறையாடப்பட்டுள்ளன.

"பொலிஸ் பொதுமக்கள் நல்லுறவுக்கு எடுத்துக்காட்டாக விளங்குவது கண்ணாப் பிரதேசமாகும். அண்மையில் இடம்பெற்ற நீர்கேலி கொள்கையில் பலியான பொலிசார் கண்ணாம் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களிறந்த செய்தியினைக் கேட்டதும் அப்பகுதி மக்கள் தங்கள் அனுதாபத்தினை முழு மரியாதையுடன் கடைகளை அடைத்து கறுப்புக்கொடி கட்டி, அனுதாபங்கள் செலுத்தியதுடன் நில்லாது அப்பொலிஸ் குடும்பங்களுக்கு ரூபா 10 ஆயிரம் சேரித்து கொடுத்து அனுதாபச் செய்திகளையும் அனுப்பிவைத்தார்கள்.

சமீபத்தில் பொலிஸ் காடையர்களின் வன்செயலின்போது இப்பிரதேசத்திலே பொதுமக்கள் தாக்கப்பட்டும், சந்தை உட்பட 35 க்கு மேற்பட்ட கடைகளைக் கொள்ளையடித்து அக்கடைகளுக்கு தீவைத்தது நன்கெண்ணம்கொண்ட எவருடைய உள்ளத்தையும் புண்படுத்தாமல் இருக்கமுடியாது.

"மக்கள் உடைமை நாசமாக்கப்பட்டதினால் அவர்களின் சுமையை ஈடுசெய்யும் வகையில் உடனடியாக முழுநட்ட ஈடு வழங்க அரசு முன்வரவேண்டுமெனவும் நாம் வலியுறுத்துவதோடு யாழ்நகர் இந்த நிலைக்கு ஆளப்பட்டிருந்த சமயத்தில் அரசியல் கட்சியல்லாத பல்வேறு பொது அமைப்புகள் தமது பங்களிப்பினை நல்ல முறையாக செலுத்தியமைக்காகவும் எமது மாவட்ட அமைப்புக்குழு நன்றியை பிரகடனப்படுத்துகிறது." (ச)

## மிட்டரான்ட் அரசில் கம்யூனிஸ்ட் அமைச்சர்கள்

பாரிஸ் ஜூன் 24

பிரான்ஸின் புதிய ஜனாதிபதி திரு. மிட்டரான்ட் தனது அரசாங்கத்தில் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த நான்கு பேரை அமைச்சர்களாக நியமித்துள்ளார்.

இரண்டாவது உலக மகாயுத்தத்தின் பின்னர் பிரான்ஸில் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த அமைச்சர்கள் நியமிக்கப்பட்டது இதுவே முதல் தடவையாகும் (வெ)

## கெய்ரோவில் பானிசத்தார்?

கெய்ரோ. ஜூன். 24

முன்னாள் ஈரானிய ஜனாதிபதி பானிசதார் கெய்ரோவில் இருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இச்செய்தியை எகிப்திய அரசாங்கம் உத்தியோகபூர்வமாக ஏற்கவுமில்லை மறுக்கவுமில்லை.

பானிசத்தார் கடந்த இருவாரங்களாக பொதுமக்களின் கண்ணில் தென்படவில்லையென்று ஈரானிய அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. பானிசதாரை கைது செய்வதற்கு ஈரானில் பிடிவிருந்து பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஈரானில் ஜனாதிபதியின் கடமைகளை மேற்கொள்வதற்காக மூன்றுபேர் கொண்ட சபையொன்று நியமிக்கப்பட்டுள்ளது. இச்சபையில் ஈரானின் பிரதம நீதியரசர், பிரதம மந்திரி, சபாநாயகர் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

ஈரானின் புதிய ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான தேர்தல் ஐம்பது தினங்களுக்குள் நடைபெறவுள்ளது [வெ]

## எதிர்க்கட்சிகள் ஒத்துழைப்பதில்லை

சென்னை ஜூன் 24

"தமிழ்நாடு அரசின் அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு மாநில எதிர்க்கட்சிகள் ஒத்துழைப்பு நல்காது மாநில அரசின் மீது குற்றம் சுமத்த முயற்சித்து வருகின்றன".

மேற்கண்டவாறு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் நாகபட்டினத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றுகையில் கூறினார். (வெ)

பாவனை முறை:-
18 லீட்டர் நீரில் 25 மிலிலீட்டர் அக்டெலிக் 50 கலந்து 10 நாட்களுக்கு ஒரு முறை தெளிக்கவும். (4 கலன் நீரில் 1 திரவ அவுன்ஸ் அக்டெலிக் 50 கலந்து 10 நாட்களுக்கு ஒரு முறை தெளிக்கவும்.)

மேலும் விபரங்களுக்குத் தொடர்பு கொள்க:

CIC கெமிக்கல் இன்டஸ்ட்ரீஸ் (கொழும்பு) லிமிட்டெட்
த. பெ. எண் 352, கொழும்பு 1.

100 மி. லீ. ரூபா 31–50 200 மி. லீ. 57–00
450 மி. லீ. 119–50

**வெஸ்லி** (யாழ்ப்பாணம்)
தினசரி 6-15, 9-30
சனி,ஞாயிறு 2-30
எம் ஜி. ஆர்-லதா
**நாளை நமதே**

**நாகம்ஸ்** (கல்லுமம்)
தினசரி 6-30, 9-30
சனி,ஞாயிறு 2-30
வொஜி-சாவித்திரி
**காத்தவராயன்**

5-வது ஜனத்திரள் வாரம்!
**சாந்தி** (யாழ்நகர்) 10-30 2-30, 6-30 9-45
சிவாஜி, விஜயா
**தர்மராஜா** (கலர்)

**வெலிங்டன்**
10 30, 2-30 6-00, 9-30
ரஜனிகாந்த் - லதா
**ஆயிரம் ஜென்மங்கள்**

**லிடோ** யாழ். நகர்
10-30 2-30, 6-00, 9-30
**அழியாத கோலங்கள்**
(வயது வந்தவர்களுக்கு மட்டும்)

**மனோகரா** தினசரி 10-30, 3-15, 4 45, 7-00, 9-30
(யாழ்ப்பாணம்)
**CAR**
(Action Film)

**வின்ஸர்** இன்னும் சிலதினங்கள் மட்டும்
யாழ்ப்பாணம்
தினசரி காலை 10-30, 3 30, 6-00
வொஜி கணேசன் - கே. ஆர். விஜயா
**ரிஷி மூலம்**

**ஸ்ரீதர்** (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 3-00, 6-00 9-30
★ வொஜி ★ ஜெய்கணேஷ் ★ தேவி
★ ஜெயதா ★ சந்தரராஜன் ★ சௌகார்ஜானகி
**கட்டாக்கத்தி பைரவன்**
(வண்ணப்படம்)

**RAJAH** Jaffna Daily 10-30, 2-00, 4-30 7-00 9-45
**Krakatowa East of Java**
(Color Scope-Thrill and Suspence
From 27th June 81
A long awaited film that has come to smash over the previous record collection.
BRUSLEY.....?


## இளைப்பாறினார்

கடந்த இரண்டாவது உலகமகா யுத்தத்தின்போதுகூட நிகரபாதுகாப்புசேவையில்பணியாற்றிய திரு சி. அரசரத்தினம் பின்னர் ஆசிரியர் பயிற்சி பெற்று முப்பத்தாறு வருடங்கள் மந்தமான ஆசிரியப்பணி புரிந்து இளைப்பாறினார்.

மாவிட்டபுரம் வீமன்காமம் ஆங்கிலப்பாடசாலையில் உதவி ஆசிரியராக 18 வருடங்கள் சேவையாற்றிய பின்னர் 1965ம் ஆண்டில் மானிப்பாய் இந்துக்கல்லூரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டார். எட்டு வருடங்களுக்கு மேலாக இந்து கனிஷ்ட பிரிவு அதிபராகக் கடமையாற்றியதுடன் கல்லூரியின் வளர்ச்சிக்கு; நடப்போட்டி, விளையாட்டுப்போட்டிகளில், இல்லப்போட்டிகளில் ஈடுபட்டு ஆசிரியர்களதும், மாணவர்களதும் அன்பையும் அபிமானத்தையும் பெற்றார். விலங்கினால் அதிகடமை நிப்பாய் வட்டார தமிழர் ஆசிரியர் சங்க தலைவராக 5 மாவட்ட பெற்றார் ஆசிரியர் சங்க செயலாளராக திறம்பட சேவையாற்றினார்.

தான் ஆரம்ப கல்வி பெற்ற உடுவில் முருகமூர்த்தி வித்தியாலய அதிபராக ஒரு சில ஆண்டுகள் இருந்தகாலத்தில் பதவிவகித்தஇவர் அக்குறுகிய காலத்தில் பாடசாலை சம்பவத்திரட்டில் இடம்பெறக் கூடிய தரமான பலசாதனைகளை நிகழ்த்தியுள்ளார்.


**ஹரன்** யாழ்ப்பாணம்
தினசரி 3 காட்சிகள்
ஜெய்சங்கர்-ராதிகா
**ரத்தத்தின் ரத்தம்**


## யாழ். பொதுசன நூலகம்:
# 'நிதி வசூலிப்பதற்கு எவருக்கும் அதிகாரமில்லை'
### ஆணையாளர் எச்சரிக்கை

[யாழ்ப்பாணம்]

"வன்செயல்களினால் பாதிப்புற்ற யாழ். பொதுசன நூலகத்தை அபிவிருத்தி செய்வதற்கு பொதுமக்களிடமிருந்து பணத்தை வசூலிப்பதற்கு எவருக்கும் யாழ்ப்பாண மாநகரசபையிர்வாகம் அவகாசம் வழங்கவில்லை சிலர். இதனைச் சாட்டாக வைத்து, நிதி திரட்டி வருபவர்களுக்கு பொதுமக்கள் பணம் எதுவும் வழங்கக்கூடாது"

இத்தகவலை யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளர் திரு எஸ் சிவஞானம் 'ஈழநாடு' பத்திரிகைக்குத் தகவல் தெரிவித்தார்.

'நூலக அபிவிருத்திக்கு நன்கொடை வழங்குவோர் நிதியை நேரடியாக நூலக நம்பிக்கை நிதிக்கு செலுத்தலாமென்றும் யாழ்ப்பாண மாநகரசபை நூலக நம்பிக்கை நிதிக்கு மாநகரசபைக் காரியாலயத்தில் செலுத்தி ரசீதுகளை பெறலாமென்றும் அவர் தெரிவித்தார். [மே-அ]

## பொலிஸாக...
(3ம் பக்கத் தொடர்ச்சி)

பொதுமக்கள் சூழ்ந்ததும் விபரீதமான நிலை ஏற்படலாம் என எண்ணிய புகையிரத ஊழியர்கள் 'தப்பியது தம்பிராசா புண்ணியம்' என்று தமது விடுதிக்குள் ஓடித் தப்பிவிட்டனர்.

இது குறித்துக் காங்கேசன் துறைப் பொலிஸிலும் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது

இந்த ஊழியர்கள் அனைவரும் சிங்கள ஊழியர்களே என்பது பின்னர் தெரிவந்தது.

# தந்தை ஏசினார்: மகன் தற்கொலை!

(கிளிநொச்சி)

தந்தை ஏசியதால் மனமுடைந்த மைந்தன் ஒருவர் கிருமி நாசினி அருந்தித் தற்கொலை செய் கொண்டார்.

(புளியம் பொக்கணையைச் சேர்ந்த முருகேசு நடராசா 29 வயது என்பவரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டவராவார்.

இவரது மரண விசாரணை கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் கிளிநொச்சி மரணவிசாரணை அதிகாரி திரு எம் போகவிங்கம் முன்னிலையில் நடைபெற்ற போது மரணமானவரின் தந்தையான திரு சின்னத்தம்பி முருகேசு சாட்சியமளிக்கையில் கூறியதாவது

சம்வதினம் காலை 10 மணியளவில் மரணமான எனது மகன் வீட்டிலிருந்து வெளியே போனார் நான் அவரை தடுத்து மாட்டுக்கு தீனி வைத்துவிட்டுப் போகும்படி கூறினேன் இப்போது திருப்பி வந்து விடுவேன் வந்ததும் தீனிவைப்பதாகக் கூறிவிட்டு வெளியே சென்று விட்டார். அவர் 2 மணியளவில் வீடு திரும்பினார்.

மாட்டுக்கு தீனிவைக்காது மாடு மாதிரி ஊர்சுற்றிவிட்டு சாப்பாட்டு நேரத்திற்கு திரும்பி வந்து விட்டாய் என அவரை ஏசினேன் அவர் எதிர்வார்த்தை எதுவும் பேசாது தோட்டத்திற்குச் சென்று நஞ்சு அருந்தினார். உடனடியாக அவரை கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றோம்: அவர் அங்கு மரணமானார்.

சட்டவைத்திய அதிகாரி டாக்டர் திரு என். விக்கிங்கம் பிரேத பரிசோதனையை மேற்கொண்டார். காங்கேசன்துறை திரு. விஜயரத்தினம் சாட்சிகளை ஆஜர் செய்தார். மரண விசாரணை அதிகாரி தற்கொலை எனத்தீர்ப்பளித்தார். [கொ

## வீட்டில் திருட்டு!
### நபர் கைது

[பண்டத்தரிப்பு]

அரசு வங்கியுள்ள வீடு ஒன்றில் மின்சாரசாதனங்கள் உட்பட 950 ரூபா பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டது தொடர்பாக சம்பவதினம் பொலிசாரால் சந்தேகிக்கப்பட்டதாக பொலிஸ் உயர்மட்டக்குழு முன்னிலையில் சாட்சியங்கள் தொகுக்கப்பட்டுள்ளன

வன்செயல்கள் நடைபெற்ற வேளையில் வீடு கடைகளில் தனிப்பட்டவர்களுக்கொள்ளையடித்திருக்கக்கூடும். ஆயுதப் படையினர் உடைத்துவிட்டுச் சென்ற கடைகளிலேயே அவ்வாறு நடைபெற்றுள்ள என ஒருவர் சுட்டிக் காட்டினார்.

குழப்பம் நடந்த வேளையில் டெலிபோனில் பொலிசாருடன் தொடர்பு கொண்ட வேளையில் அங்கிருந்தவர்கள் சிரித்து படிவிட்டதாகவும் ஒருவர் தெரிவித்தார்.

## யாழ். வன்செயல்கள் பற்றி
# பொலிசில் ஏன் உடனே புகார் செய்யவில்லை!

(யாழ்ப்பாணம்)

யாழ் நகரில் வன்செயல்கள் ஜூன் 1ம், 2ம், 3ம் திகதிகளில் நடைபெற்றிருந்தபோதிலும் பல நாள் கழித்து பொலிஸ் விசாரணைக் குழு முன்னிலையிலேயே இவைபற்றிய புகார்கள் தெரிவிக்கப்பட்டுள்ளனவென்று ஒரு ஆங்கிலத் தினசரியில் செய்தி வெளிவந்திருப்பதை வன்செயல்களால் பாதிக்கப்பட்டவர் கண்டித்திருக்கிறார்கள்.

மேற்படி செய்தியில் பாதிக்கப்பட்டவர்கள் முன்கூட்டியே பொலிசாருக்குப் புகார் செய்யத் தவறிவிட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் தீவைப்பு-கொள்ளையடித்தல் போன்ற செயல்களில் பொலிசாரே ஈடுபட்டனர் என்று பொதுவான பீதி நிலவிய வேளையில் அவர்களிடமே புகார் தெரிவிக்க எவரும் முன்வந்திருக்க முடியுமா என்று எவரோ கேட்டிருக்கலாம் மேலும் துணிச்சலுடன் புகார் செய்யச் சென்றவர்களும் பீதியடைந்திருந்த பொலிசாரால் துரத்தப்பட்டதாகப் பொலிஸ் உயர்மட்டக்குழு முன்னிலையில் சாட்சியங்கள் தொகுக்கப்பட்டுள்ளன

வன்செயல்கள் நடைபெற்ற வேளையில் கடைகளில் தனிப்பட்டவர்களுக்கொள்ளையடித்திருக்கக்கூடும். ஆயுதப் படையினர் உடைத்துவிட்டுச் சென்ற கடைகளிலேயே அவ்வாறு நடைபெற்றுள்ள என ஒருவர் சுட்டிக் காட்டினார்.

குழப்பம் நடந்த வேளையில் டெலிபோனில் பொலிசாருடன் தொடர்பு கொண்ட வேளையில் அங்கிருந்தவர்கள் சிரித்து படிவிட்டதாகவும் ஒருவர் தெரிவித்தார்.


**ராணி**- யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
**100வது** வெற்றித்திருநாளை முன்னிட்டு மூன்று ரொக்கப் பரிசுகள்.
19-06-81 முதல் 26-06-81 வரை தீ படத்தைப் பார்ப்பவர்களுக்கு இப்பரிசுகள் கிடைக்கும். டிக்கட்டுகளை கவனமாக வைத்திருங்கள்
முதல் பரிசு 3000-00, இரண்டாம் பரிசு 1500-00, மூன்றாம் பரிசு 500-00
★ ரஜனிகாந் ★ ஷோபா இணைந்து வழங்கும்
**தீ**
மகாராஜா-சுரேஷ் கூட்டுத்தயாரிப்பு
தென்னகத்தில் 100 தினங்கள் ஓடி வெற்றி முழக்கமிடுவது தீ
காணத் தயாராகுங்கள்

# தமிழர் கூட்டணி அலுவலகம் தீக்கிரை

# ரூ. 8 லட்சம் சேதம்!

## பட்டப்பகலில் நிகழ்ந்த அட்டூழியம்

## கொள்ளை குறித்தும் பண்டிதர் வாக்குமூலம்

[யாழ்ப்பாணம்]

தமிழர் விடுதலைக்கூட்டணி தலைமைக் காரியாலயம் தீக்கிரையாக்கப்பட்டதனால் பல லட்சம் ரூபா பெறுமதியான ஆவணங்கள் தீக்கிரையாக்கப்பட்டதனால் மக்கள் 8 லட்சம் ரூபா சேதம் ஏற்பட்டது.

பொலிஸ் பயிற்சிக் கல்லூரியிலிருந்து இங்கு வந்ததாகக் கருதப்படும் பொலிசார் இம் மாதம் 2-ம் திகதி பிற்பகல் பண்ணைப் பாலத்துக்கு அண்மையில் நின்று அவ்வழியால் சென்றுகொண்டிருந்தவர்களைத் தாக்கியதுடன் அவர்களின் உடைமைகளையும் கொள்ளையடித்தனர்.

இவ்வாறு ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் வடபகுதி வன்செயல்கள் குறித்து விசாரணை செய்துவரும் பொலிஸ் குழுவைச் சேர்ந்த இன்ஸ்பெக்டரிடம் தெரிவித்தார்.

மேற்படி குழுவைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் ஜனுரி. எம். மிடின் நேற்று முன்தினம் பண்டிதரின் இல்லத்திற்குச் சென்று அவரின் வாக்குமூலத்தைப் பதிவுசெய்துகொண்டார்.

பண்டிதர் இரத்தினம் தமது வாக்குமூலத்தில், தமிழர் விடுதலைக் கூட்டணியின் அமைப்பு நிர்வாகச் செயலாளர் என்ற ரீதியில் கூட்டணித் தலைமைக் காரியாலயத்தில் 200க்கும் மேற்பட்ட பொருட்களின் விரங்களை உத்தியோகபூர்வமாக விளக்கிக் கூறினர்.

கதிரைகள், மேசைகள், தட்டச்சுப்பொறி, ரேனியோ இயந்திரம், தமிழரசுக்கட்சியினதும், தமிழர் விடுதலைக் கூட்டணியினதும் விலைமதிப் பற்ற ஆவணங்களும், 'உதய சூரியன்' ஏட்டின் பழைய, புதிய சுவடிகள், அச்செழுத்துக்கள், கணக்குப் பதிவேடுகள் ஆகியனவும், 35 ஆண்டுகளுக்கு மேல் பேணிப் பாதுகாக்கப்பட்டுவந்த தமிழரசுக் கட்சியின் ஆவணங்களும் எரிந்து சாம்பராயின என்றும் தமது வாக்குமூலத்தில் தெரிவித்தார். [இ]

### விற்பனைக்கு

தனிப்பாவிப்பிலும் நல்ல நிலைமையிலும் உள்ள K 125 Suzuki 81 Sri (2380 இடமாற்றம் காரணமாக உடன் விற்பனைக்கு உள்ளது. த. சிவகப்பிரமணியம், உதவி தபால் அதிபர், முருகன் வீதி, கிழக்கு உரும்பராய். 0105

### பயிற்சி

ரேடியோ - டெலிவிசன் எயர்கொண்டிசனிங் - வெல்டிங் மூன்றுமாத டிப்பிளோமா பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பம். 29 - 6 - 81 அன்வரும் சேரலாம். நாஷனல் அக்கடமி, மொம்சாக் கட்டிடம் 11, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம். 0100

### ஒழுங்கையில்....

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

நீதவான் திரு. ரி, ஜோகநாதன் முன்னிலையில் விசாரணை நடைபெற்றது.

மனுதாரன் சாட்சியமளிக்கையில் மேலும் கூறியதாவது:

"இம்மாதம் 3ம் தேதி கோப்பாய் வடக்கிலுள்ள எனது வீட்டில் வசித்தேன். எனது வீட்டுக்கு எதிரில் கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் காரியாலயம் இருக்கிறது. 3ம்திகதி இரவு 8 மணிக்கு கேற்றைப் பூட்டுவதற்கு வெளியில் வந்தேன். இறந்த பரமேஸ்வரன் வீதியால் யாழ்ப்பாணப்பக்கமிருந்து, பருத்தித்துறைப் பக்கம் சென்று கொண்டிருந்தார். வேறு ஆட்கள் அப்போது காணவில்லை நன்றாக இருட்டாக இருந்தது. கேற்றைப் பூட்டும்போது ஜீப் வண்டி ஒன்று வேகமாக வந்தது. எனதுகேற்றுக்குத் தகரம் அடிக்கப்பட்டிருந்து. ஜீப்வண்டியைக் காணவில்லை. சத்தத்திலிருந்து ஜீப் வண்டி என அறிந்து கொண்டேன். ஜீப் நிறுத்தப்பட்டிருந்ததை கதவைத் திறந்து பார்த்தேன். ஒழுங்கையில் சென்ற ஒருவரை கூப்பிட்டு ஜீப்பில் ஏற்றுவதைப்பார்த்தேன் பரமேஸ்வரன் அப்போது அந்த ஒழுங்கையில்தான் இருந்தவர்.

### நீளக் கால்சட்டை ஷோர்ட் அணிந்த...

இரண்டு பேர் ஜீப்பிலிருந்து இறங்கி அவரை ஜீப்பும் ஏற்றினார்கள். இருவரும் நீளக் கால்சட்டையும் சேட்டும் அணிந்திருந்தனர். இருட்டில் காலச்சட்டை நிறம் தெரியவில்லை. அப்போது உதவிஅரசாங்க அதிபர் காரியாலயக் காவலாளி கேற்றடிக்கு வந்தார். காவலாளியாரை ஜீப்பில் ஏற்றினார்கள் என்று கேட்டார். பரமேஸ்வரன் ஒழுங்கையில் போனவர் அவராகத்தான இருக்குமென்று நான் சொன்னேன்.

### உதவி அரச அதிபரிடம்

உதவி அரசாங்க அதிபர் தேர்தல் வேலை காரணமாகக் காரியாலயத்தில் இருந்தார். எனக்கு அவரை முன்பே பழக்கம் இதுநடந்தவுடன் அவரது காரியாலத்திற்கு சென்று நடந்தவற்றை சொன்னேன்.

பரமேஸ்வரன் வீதியால் சென்றார். ஜீப் ஒன்று வந்து யாரையோ ஏற்றிப்போவதாகச்சொன்னேன். அது பரமேஸ்வரனாயுமிருக்கலாம் என்றும சொன்னேன்.

உதவி அரசாங்க அதிபரிடம் ஜீப் என்று தான் சொன்னேன். வாகனம்பற்றிவேறுவிபரம் கூறவில்லை. நான் உதவி அரசாங்க அதிபரிடம் கூறிய போது காவலாளி வெளியில் நின்று கொண்டிருந்தார். திரும்பும்போது காவலாளியிடம் உதவி அரசாங்க அதிபர் கூறியவற்றைச் சொன்னேன்.

4ம் தேதி பகல் 11 மணிக்கு இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் வீட்டிற்கு வந்தனர். என்னை கோப்பாய் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து சென்றனர். என்று ஒரு வாக்குமூலம் அளித்தேன்.

3ம் தே இரவு 8மணிக்குப் பின்னர் மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்தது. அதனால் வெளிச்சமில்லை

கோப்பாய் பொலீஸ் நிலைய வாகன நடமாட்ட பதிவேட்டையும், தோட்டா இருப்புப் பதிவேட்டையும் அடுத்த மாதம் 1ம் தேதி கோர்ட்டில் சமர்ப்பிக்குமாறு கோப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியை நீதவான் பணித்து, அன்றைய தினம் கோப்பாய் உதவி அரசாங்க அதிபரை சாட்சியமளிக்குமாறும் கட்டளை பிறபபித்துள்ளார்

### லட்சார்ச்சனை

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் திருவண்ணை நகர் அருள்மிகு செந்தில்கதிர் வேலாயுத சுவாமி திருக்கோயில் [ஸ்ரீ கதிரேசன் கோயில்] லட்சார்ச்சனை இன்று வியாழக்கிழமை நிறைவுபெறுகிறது.

இன்று காலை 8-40 மணி தொடக்கம் லட்சார்ச்சனை நிறைவுக்கான சங்காபிஷேகம், லட்சார்ச்சனை நிறைவு, அன்னம் பாலிப்பு, மணவாளக் கோலம், திருக்கல்யாணம், பூந்தண்டிகையில் திருவுலா ஆகிய வழிபாடுகள் நடைபெறும்.

# தியாகர் கொலை:

## சந்தேகநபர்களுக்கு பிணை!

## எவரும் அடையாளம் காட்டவில்லை

[யாழ்ப்பாணம்]

முன்னாள் வட்டுக்கோட்டை எம். பி.யும், யாழ் மாவட்ட அபிவிருத்தி சபையில் ஐக்கிய தேசியக்கட்சி சார்பில் தலைமை வேட்பாளராகப் போட்டியிட்டவருமான கலாநிதி ஆ. தியாகராசாவின் கொலை தொடர்பாக அடையாள அணிவகுப்பு நேற்றுக்காலை நடைபெற்றபொழுது சந்தேகநபர்கள் எவரும் அடையாளம் காணப்படவில்லை. சந்தேகநபர்கள் இருவரும் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

அடையாள அணிவகுப்புக் குட்படுத்த பட்ட வீரசிங்கம் இராசேந்திரம், வீரசிங்கம் கணேசராசா ஆகிய இரு சந்தேகநபர்களும், முடிமறைக்கப்பட்ட வானில் மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்துக்கு கொண்டுவரப்பட்டதை அடுத்து மாவட்ட பதில் நீதிபதி திரு வி. பாலசிங்கம் அணிவகுப்பை நடாத்தினர்.

சந்தேகநபர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம் அடையாளஅணிவகுப்பு நடத்துவதற்கு ஆட்சேபனை ஒன்றைக் கிளப்பினர். இதைப் பதிவு செய்துகொண்ட பதில் நீதிபதி அணிவகுப்பை நடாத்தினர்.

அணிவகுப்பின்போது, வட்டுக்கோட்டை ஐ. தே. க. அமைப்பாளர் நா. இரத்தினசிங்கம், மூளாயைச் சேர்ந்த த கணேசலிங்கம் ஆகிய இருவரும் சந்தேகநபர்களை அடையாளம் காட்டவில்லை.

சந்தேகநபர்கள் அடையாளம் காட்டப்படாததைத் தொடர்ந்து, அவர்களை விடுதலைசெய்யுமாறு சட்டத்தரணி திரு. செல்வரத்தினம் பதில் நீதிபதியிடம் கோரினர்.

இதனை ஆட்சேபித்த காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அதிபர் திரு. சேனநாயக்கா, சந்தேகநபர்களை விடுதலை செய்ய வேண்டாமென்றும், பிணையில்செல்லஅனுமதிக்கலாமென்றும் கூறியதைத் தொடர்ந்து, சந்தேகநபர்கள் இருவரும் தலா 2000 ரூபா ரொக்கப் பிணையில் செல்ல பதில் நீதிபதி அனுமதித்தார்.

[மாவி.சுன்.- நி]


## சிங்கப்பூரில் வேலை வாய்ப்பு

### ஆண்கள்

மெக்கானிக் (டீசல்-பெற்ரேல்)
கடைச்சல் இயந்திரம்இயக்குனர் (Lathe Operator)
பைப் பொருத்துனர் (Pipe Fitters)
வெல்டர்ஸ் (Api Welder)
வயது எல்லை 20—35

### பெண்கள்

தட்டெழுத்து தொழிற்சாலையில் வேலைபார்ப்பதற்கு பெண்கள் தேவை
வயது எல்லை 18—30
பாஸ்போட்டுடன் நேரில் வரவும்.

**சாகிப் ட்றேட் சென்டர்**
[Sahib Trade Centre]
148, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம்.

**HAKEEM TRADES**
63, Dam Street, Colombo--12,
L/No. 363 0116



# ஹோம் பிறைஸ் லிமிட்.

★ SANDEN [JAPAN] சைக்கிள் டைனமோ கையிருப்பில் உண்டு.
கீழ்க்காணும் பொருட்களை மாதாமாதம் கட்டுப்பண முறையில் பெறலாம்.

★ உஷ்ணகாலத்திற்கு உகந்த முதல் தரமான USHA Ceiling Fan
★ மேசை மின் விசிறி 16"
★ உயர் தரமான "AIWA" கசற் றேடியோ
★ சைக்கிள்கள்

விபரங்கட்கு:
**ஹோம் பிறைஸ் லிமிட்**
82, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.
போன்: 8310


## மரண அறிவித்தல்

### வ. செல்வநாயகம்

உரும்பராய் காலஞ்சென்ற வைத்திய கலாநிதி வ. வல்லிபுரத்தின் மகனும் மலேசியா வாசியுமான திரு. வ. செல்வநாயகம் அவர்கள் மலேசியாவில் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற காந்திமதி இளையதம்பி, மூளாயைச் சேர்ந்த திருமதி செல்லம்மா வைத்திலிங்கத்தின் அருமைச் சகோதரனும், காலஞ்சென்ற உரும்பிராய் இந்துக்கல்லூரி இளைப்பாறிய ஆசிரியர் இளையதம்பி, காலஞ்சென்ற வைத்திலிங்கத்தின் மைத்துனருமாவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: சகோதரி, மருமகள்
'திருவருள்', உரும்பராய், வடக்கு.
Jalan Thambi Abdulla Satu,
Brickfields, Kuala Lumpur.
24-06-81.
0131

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி 303ம் இலக்கத்திலுள்ள கலாநிலையம் அச்சகத்தில் 1981ம் ஆண்டு ஜூன் மாதம் 25-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Regd No. QB 100236/81 P. O. Box 49, Jaffna. தற்காலிக தொலைபேசி 7707 Registered as News Paper at the General Post Office, Sri Lanka